# பழமொழி நானூறு காட்டும் அரசனின் பண்புகள்

**மு.முவின்,**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**

**ஆர் வி எஸ் கலை அறிவியல் கல்லூரி, கோவை - 641402,**

**ஆய்வுச்சுருக்கம்** :

மனிதன் தன்னைத்தானே வழி நடத்திக் கொள்வது அவனது சுய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். ஆனால் மனிதர்கள் குறிப்பிட்ட அரசியல் மற்றும் பண்பாட்டு நெறிகளுக்கு உட்பட்டு , ஒரு சமூகமாகவாழும் நிலையில் , சமூகத்தை வழி நடத்துவதற்கு அந்த சமூகமே ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் அல்லது நெருக்கடியான சூழலில் சமூகம் சிக்கிக் கொள்ளும் போது அதிலிருந்து அவர்களை மீட்கசரியான தருணத்தில் தலைவன் ஒருவன் அக்கூட்டத்திலிருந்து உருவாகிறான். இவ்வழியில், தலைவன் உருவாதல் அந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். இதனால், ஆபத்திலிருந்து தங்களை மீட்ட தலைமை மாந்தரைப்பின் பற்றும், அல்லது வழி படும் நிலை இயல்பாகவே அச்ச மூகத்திற்கு உண்டாகிறது . இதுவே பின்னாளில் அதிகாரங்கள் குவிக்கப்பட்ட மன்னன் என்ற உச்சபட்ச அதிகாரம் கொண்டதலைமை உருவாகக் காரணமாகிறது. இத்தகைய அதிகாரம் கொண்ட அரசன் தவறு செய்யும் போது அல்லது இயல்பாகவே மன்னனுக்கு அறிவுரை வழங்க சங்ககாலத்தில் புலவர்பலர் இருந்துள்ளனர். செல்வம், அதிகாரம் போன்ற மிகுதியான எதுவும் அரசனின் கண்களை மறைக்கும் போது அவனைப்புலவர்கள்தம் அறிவுரைகள் மூலம் அறத்தின் வழி கொண்டு வந்த செய்திகள் தமிழ் இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. ஒரு முறை அதிகாரத்தை அனுபவித்துப் பழகிய மனிதன் , அதை எந்த சூழலிலும் இழக்கவிரும்பமாட்டான் என்பதற்கு உலக வரலாற்றில் சான்றுகள் அதிக முள்ளன. அரசனின் கடமையென்பது மக்களை அல்லது நாட்டைக் காத்தல் என்றாக வெளிப்படையாக இருப்பினும் , உளப்பூர்வமாக அதிகாரத்தை நிலைநிறுத்த, அவன் எடுக்கும் எல்லாநடவடிக்கைளும் கேட்பாரற்று நிகழ்த்தப்படுவன. அவை அனைத்தும் அறம் கடந்த அதிகாரம் தக்கவைத்தல் என்ற நிலையை நோக்கியே செல்லும். நாட்டில் மன்னராட்சி முறை என்றாலும் , அறிவிற்

சிறந்த ஆன்ற புலவர் பெருமக்கள் , மன்னன் அறம் தவறக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர். அவ்வாறு, மக்களுக்கு கொடுமை நேரும் போதும் , நாட்டின் நலனைக்கருத்தில் கொண்டு சொங்கோல் வழுவாத ஆட்சியை வழங்க வேண்டு மென்று கருதி , அரசனுக்கான ஆட்சியியல் நெறிமுறைகளை பல அற இலக்கியங்களில் பாடிவைத்துள்ளனர் . அவ்வகையில், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழி நானூறுகாட்டும் அரசனுக்கான பண்புகளை ஆராய்தல் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**முக்கியச்சொற்கள்:** அரசன், தலைமை, செங்கோன்மை, அதிகாரம், அரசியல், மக்கள்

**முன்னுரை:**

சங்கமருவியகாலஇலக்கியங்களை, பதினெண்கீழ்க்கணக்குநூல்கள்என்பர். இவை, அறஇலக்கியங்கள்என்றும், நீதிஇலக்கியங்கள்என்றும்அழைக்கப்படுகின்றன. இதில் 11 அறநூல்கள்இருக்கின்றன. இவற்றுள்பழமொழிநானூறுஒருஅறநூலாகத்திகழ்கிறது. இந்நூலின்ஆசிரியர், முன்றுறைஅரையனார்ஆவார். இதில்நானூறுபாடல்கள்இடம்பெற்றுள்ளன. இந்நூலின்ஒவ்வொருபாடலின்இறுதியிலும், ஒருபழமொழிஇடம்பெற்றுள்ளது. பாடல்சொல்லவரும்கருத்தின்சாரத்தைஇறுதியில்உள்ளபழமொழிதெள்ளிதின்உணர்த்தும்வகையில்அமைந்துள்ளது.இத்தகையபழமொழிநானூறுஎனும்அறநூல்வலியுறுத்தும்அரசனுக்கானபண்புகளைஇக்கட்டுரைஆராய்கிறது.

**செங்கோன்மைஎனும்நல்அதிகாரம் :**

பழமொழிநானூறுஅரசனுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான பண்புகளில் முதன்மையானது செங்கோன்மைஎன்று குறிப்பிடப்படுகிறது.திருக்குறளில்இடம்பெற்றுள்ளசெங்கோன்மைஎனும்அதிகாரமும்இக்கருத்தைவலியுறுத்துகிறது. சான்றாக,

“ **வானோக்கிவாழும்உலகெல்லாம்மன்னவன்**

**கோல்நோக்கிவாழும்குடி** ”( ஹெலினாதே, திருக்குறள்புதியஉரை,ப.117). பழமொழிநானூற்றில்அரசனுக்கான பண்புகளைக் குறிப்பிடும் முன்றுரை அரையனார் பல பாடல்களில், அரசன் நீதி வழுவாத செங்கோன்மைக்கு உரியவனாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதைக் காண முடிகிறது. அப்பாடல்பின்வருமாறு

“**வன்கண்ணன்ஆகிஒறுக்கஒறுக்கல்லா**

**மென்கண்ணன்ஆளான்அரசு** ”( வீ.சிவஞானம், பழமொழிநானூறு, பாஎ. 241, ப.97 )

எனும்இப்பாடல், தன் கண் போன்றவர்ஒரு தவறு செய்யும்போதுஅதைப் பொறுத்துக் கொள்ளாது, அவரை வலிமையோடு தண்டிக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் மென்மையான பண்போடு அரசன் இருந்துவிடக் கூடாது என்று வலியுறுத்துகிறது. இந்தப் பாடலுக்கு சான்றாக அமைவது போல் இதற்கு அடுத்த அரசனைப் பற்றிய பாடல் அமைந்துள்ளது என்பதும்குறிப்பிடத்தக்கது. அப்பாடல்பின்வருமாறு,

“ **கறவைக்கன்றுஊர்ந்தானைத்தந்தையும்ஊர்ந்தான்**

**முறைமைக்குமூப்புஇளமைஇல்.** ”

( வீ.சிவஞானம், பழமொழிநானூறு, பாஎ. 242, ப.98 )

முன்னம்ஒரு காலத்தில் பசுவின் கன்றின் மீது தேரை ஊர்ந்து சென்றான் தன் மகன் என்ற செய்தியை அறிந்து கொண்ட அரசன், தன் மகன் மீது தேரைஏற்றிபசுவுக்கு நீதியை நிலைநாட்டினார்என்பதுபாடல்தரும்செய்தியாகும். எனவே நீதிக்கு அதாவது அரசனுடைய செங்கோன்மைக்கு இளமை மூப்பு என்ற வேறுபாடுகள்இல்லை என்று வலியுறுத்துகிறது. இன்று உள்ள அரசியல் சட்டங்களை நோக்கினால், குற்றச்செயல்களில்ஈடுபட்டபதினெட்டுவயதுக்கு கீழ் இருப்பவர்களுக்கு சிறுவர் சீர்திருத்த பள்ளிகளின்மூலம்தண்டனைவழங்கிவருகின்றனர். ஆனால்சங்க காலத்தினுடைய அறம் வயது பார்ப்பதில்லை. அது அரசனுடைய மகனே ஆனாலும் அவன் தவறு செய்திருந்தாலும், ஒரு விலங்கிற்கு தீங்கு செய்திருந்தாலும்அந்த விலங்கிற்கு நீதி வழங்கும் பொருட்டு தன்னுடைய மகனைத்தானே கொன்ற செய்தி என்பது நீதிக்கு இளமை மூப்புஎன்ற பிரிவெல்லாம் இல்லை என்பதை வலியுறுத்துகிறது.இந்தக்கருத்தினைநிறுவும்விதமாக, முறைசெய்துமக்களைக்காப்பாற்றத்தெரியாதவன்பெற்றதலைமை, புதரில்தூவப்பட்டவிதைக்குச்சமமாகும்என்றகருத்தினைபின்வரும்திரிகடுகத்தின்பாடல் வரிகள்விளக்குகின்றன

“ **முறைசெய்யான்பெற்றதலைமை**

**தூற்றின்கண்தூவியவித்து** ” ( மாணிக்கவாசகன். ஞா, திரிகடுகம்மூலமும்உரையும், ப. 91 )

இன்றைய சமூகத்தினுடைய நிலைமை பணமிருப்பவன் எல்லா சூழ்நிலைகளிலும் வெற்றி பெறுவான். பணத்தைக் கொண்டு எதையும் பெற்றுவிடலாம், பணத்தைக்

கொண்டு நீதியைக் கூட பெற்றுவிடலாம், பணத்தைக் கொண்டு பொய் சாட்சி சொல்ல வைக்கலாம் என்ற சிந்தனைபெருகிய சமூகத்தில் இன்று வாழ்ந்து வருகிறோம். ஆனால் அரசனுக்கு சொல்லப்பட்ட ஒரு மிக முக்கியமான பண்பு,அரசன் தன்னிடம் நீதிகிட்டு வருபவர்கள் செல்வன் என்றோ, ஏழை என்றோ பாராமல் அப்போதையவழக்கிற்கு என்ன நீதி என்பதைத்தான் வழங்க வேண்டுமே தவிர, அவனுடைய செல்வ வளத்தை, அவனுடைய பின்னணியை அறியும்செயலில்ஈடுபடக்கூடாது. இதனைதாயின் ஒரு மார்பில் பாலும், மறு மார்பில் நீரும் ஒழுகுவது சரியாக இருக்காது என்ற பழமொழியை பொருத்தி அரசன் எல்லோரிடத்தும் ஒரே மாதிரி நடந்து கொள்ள வேண்டும் என்கிற நீதி வழுவாத் தன்மையைபழமொழிநானூற்றின் 243 வதுபாடலில் வலியுறுத்துகிறார் முன்றுரை அரையனார்

**“வெங்கோன்மைவேந்தர்கண்வேண்டும்சிறிதுஎனினும்**

**தண்கோல்எடுக்குமாம்மெய்”** ( வீ.சிவஞானம், பழமொழிநானூறு,பாஎ. 250, ப.101 )

என்றபாடல், அரசன் பகை நாட்டு மன்னனிடம் சிறிது கொடுங்கோன்மை காட்டினாலும்தவறில்லை. அவனுடைய சிறப்பு அவன் எடுக்கக்கூடியமுடிவுகளிலும், அவன் எடுத்து நடத்தக்கூடிய ஆட்சி சிறப்பிலுமே உண்மையியில்இருக்கிறது என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

**அன்பும், அதிகாரமும்** :

அரசன் எவ்வளவு அதிகாரம் உள்ளவனாக இருக்கிறாரோ அந்த அளவிற்கு மக்களிடம் அன்பு செலுத்தக் கூடியவனாகவும் இருக்க வேண்டும். ஏனெனில்தலைவன்மக்களிடம்இருந்தேஉருவாகிறான். ஒருமருத்துவரைப்போல், வழக்கறிஞரைப்போல்தலைவன்உருவாக்கப்படுவதில்லை. தனக்குள்இருந்துவரும்தலைவனைமக்கள்ஏற்றுக்கொள்வார்கள்என்றகருத்தினை“ **மக்கள்தங்களைப்போலஇருக்கின்ற, தங்களைப்பிரதிபலிக்கின்றமனிதர்களையேதலைவர்களாகவைத்தஎப்போதும்கொண்டாடுகிறார்கள்** ”( இறையன்புவெ, சிம்மாசனசீக்ரெட், ப.62 ) இக்கூற்றுமெய்ப்பிக்கிறது.

மக்கள் மீது பேரன்பு உண்டு மக்களை நேசிக்கக் கூடிய ஒரு நல்லாட்சியை அரசன் நடத்துவானேயானால் அவனை அழிக்கும் மனம் கொண்ட மாற்றுநாட்டுஅரசன் தன்

வீரதீரச் செயல்களை எல்லாம் மக்களிடம்எடுத்துக் கூறினால் என்ன ஆகப்போகிறது? மக்கள்எல்லோரும் தன் நாட்டு அரசனை இறைவனாகக் கருதும்போது எதிரி நாட்டு அரசனை பெரிதாக எடுத்துக் கொள்ளவே மாட்டார்கள். இதனைபழமொழிநானூற்றின் 249வதுபாடலில் ஆயிரம் காக்கைக்கு ஓர்கல் என்ற பழமொழியைக்கொண்டு எடுத்துரைக்கிறார்முன்றுரை அரையனார். இதனைநிறுவும்விதமாகஅமைந்துள்ளசிறுபஞ்சமூலம்பாடல்வரிபின்வருமாறு,.

“ **நெகிழ்ந்தஅருளினால்ஆகும்அறம்** ” ( மாணிக்கவாசகன். ஞா, சிறுபஞ்சமூலம்மூலமும்உரையும், ப.45 ). எனும்இவ்வரி, இரக்கமேஅருள்என்றுகூறுகிறது.

ஒரு அரசன் சிற்றரசனாகவே இருப்பினும் தன் எல்லைக்குட்பட்டு அதிகாரத்தை பயன்படுத்தியே ஆக வேண்டும். செங்கொன்மை எப்படியோ அதேபோல அதிகாரமும் பயன்படுத்தப்பட வேண்டும். ஒருவேளைஅரசன்அதிகாரத்தைபயன்படுத்தாமல் போனால், அவன் அரசன் அல்லன்.சாதாரணமானகுடிமக்களுள் ஒருவன் என்கிற நிலைக்கு வந்து விடுவான் என்பதால் அதிகாரத்தை அவன் தன்னளவில் பயன்படுத்த வேண்டும்என்றுபழமொழிநானூற்றின் 248 வதுபாடலில்வலியுறுத்துகிறார்முன்றுரைஅரையனார். சிற்றரசனே ஆயினும் அதிகாரத்தைப்பயன்படுத்தி தன்னளவில் சிறந்தவனாக வாழ வேண்டும். இதன்மூலம்அரசன் அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் என்றகருத்தினை வலியுறுத்துகிறார்முன்றுரை அரையனார். அதேசமயம்அரசன்தன்அதிகாரத்தை மீறியும் செயல்பட்டு விடக்கூடாது. மாற்று நாட்டு மன்னனிடம் எல்லை மீறுதலும் குற்றமாகத் தான் கருதப்படுகிறது. தன்னளவில் சிறப்புடையவனாக இருத்தலும், அதிகாரத்தை பயன்படுத்துவதும்அரசனுக்கு அழகு. அரசன் அன்புடனும் அதிகாரத்துடனும் நடந்து கொள்ளும் போது அவனுடைய கட்டளைக்கு கீழ் வேறு எந்த கட்டளையும் நிறைவேறாது. அவனுடைய கட்டளை மட்டுமே பொது மக்களுக்கும் அவன் ஆட்சியில் வாழும் அனைவருக்கும் சாசனமாக போற்றப்படும் ஆணையாகத்திகழும்.அதை வலியுறுத்தும் 251 வது பாடல் வரி,

“ **மரத்தின்கீழ்ஆகாமரம்** ”( வீ.சிவஞானம், பழமொழிநானூறு, பாஎ.251, ப.101 )

ஒரு பெரிய மரத்தின் கீழ் மற்றொரு சிறிய மரம் வளர்வது எப்படி ஆகாதோ, அதேபோல அன்பும், அதிகாரமும்கொண்ட அரசனின் நாட்டில், இன்னொருவர் வேறு ஆணை பிறப்பிக்க இயலாது என்று இப்பாடல் வலியுறுத்துகிறது.மேலும், அரசன்

எக்காலத்திலும் ஒழுக்கம் கொண்டவனாக இருக்க வேண்டும். அவன் பெருஞ்செல்வம் உடையவன், பெரும் அதிகாரம் உடையவன் என்பதற்காக தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டால் குரங்கின் கையில் கொள்ளி கொடுத்து விட்டதைப் போல நாடு நாசமாகிவிடும் என்பதை சொல்லும் 255 ஆவது பாடல் பின்வருமாறு,

**" உடைப்பெரும் செல்வத்து உயர்ந்த பெருமை**

**அடக்கமில் உள்ளத்தனாகி - நடக்கையில்**

**ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்**

**கொள்ளி கொடுத்து விடல் "** ( வீ.சிவஞானம், பழமொழிநானூறு, பா.எ. 255, ப.101 )

**மதிநுட்பமும்,சான்றோர்துணையும்** :

அரசன் எப்போதும் தன்னைச் சுற்றி இருப்பவர்களை பற்றிக் கண்காணிக்கும் மதிநுட்பம் கொண்டவனாகவும், தன் குடிமக்களுக்கு என்ன குறை உள்ளது, அதை எப்படித் தீர்க்க வேண்டும் என்பதை அறியக்கூடிய நுண்ணறிவுஉள்ளவனாகவும்இருக்க வேண்டும்என்பதனை " **தலைமைப்பண்பில்தழைத்தோங்குபவர்கள்அதிகவிழிப்புணர்வுடன்நண்பர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களைஇறுதிமூச்சுவரைதக்கவைத்துக்கொள்வார்கள் "** ( இறையன்புவெ, சிம்மாசனசீக்ரெட், ப.21 ) எனும்இறையன்புஅவ்களின்வரிகள்நிறுவுகின்றன.

வரலாற்றில்சாம்ராஜ்யங்கள்வெளியிலிருந்துவீழ்ந்ததில்லை. எனவே, அரசன் தன் உடன் இருப்பவர்கள்தான்அரசாட்சியையே கவிழ்க்கக்கூடிய பெரும்சக்தி படைத்தவர்கள் என்பதைஉணர்தல்வேண்டும். தன்னுடன் இருப்பவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டவனாக அரசன் இருக்க வேண்டும். தலைமையை விரும்புவோரை அரசன் எந்த நிலையிலும் தனக்குஅருகில் வைத்திருக்கக் கூடாது. அப்படி தனக்கு அருகில் வைத்திருந்தால் பாம்போடு கூடி ஒரு அறையில் வாழ்வதற்கு சமமாகும் என்பதைபின்வரும்பாடல்விளக்குகிறது.

**" தலைமைகருதும்தகையாரைவேந்தன்**

**நிலைமையால்நேர்செய்துஇருத்தல்- மலைமிசைக்**

**காம்புஅனுக்கும்மென்தோளாய்ஓர்அறையுள்**

**பாம்போடுஉடன்உறையும்ஆறு** " ( வீ.சிவஞானம், பழமொழிநானூறு, பாஎ. 253, ப.102 )

இப்பாடல், தலைமைப் பண்பை விரும்புவரை அரசன் தன் அருகில் வைத்துக் கொள்வது என்பது எப்போது வேண்டுமானாலும் அரசாட்சிக்கு ஆபத்து வரும் என்பதை அரசனுக்குஉணர்த்தக்கூடிய வகையில்அமைந்துள்ளது.இதைஒத்தகருத்தைபதினெண்கீழ்கணக்குநூல்களுள்ஒன்றான முதுமொழிக்காஞ்சிஎனும்அறநூலும்

" **செற்றுடன்உறைவோனைச்சேர்தல்நல்கூர்ந்தன்று**" ( மாணிக்கவாசகன்.ஞா, முதுமொழிக்காஞ்சிமூலமும்உரையும் ) எனவலியுத்துவதும்நோக்கத்தக்கதாகும்.அரசனுக்குஅறிவுரை சொல்லும் போது, புராண, இதிகாச வரலாற்றுச் செய்திகளையும்சேர்த்துச் சொல்வதில் பழமொழி நானூற்றின் ஆசிரியர் முன்றுரை அரையனார், எடுத்துச் சொல்லி விளங்க வைத்தல்எனும்ஒரு மிக நுட்பமான உத்தி முறையை கையாண்டுள்ளார். அதாவது இதற்கு முன்பு நடந்த புராண, இதிகாச நிகழ்வை ஒப்பிட்டு அறிவுரை சொல்லும் நோக்கில் அரசனுக்கு அறம்உரைப்பதைக் காணமுடிகிறது. இலங்கை அரசன் ராவணனின் தம்பி வீபீடணன், ராமனுக்குத் துணையாக வந்து சேர்ந்தவன். அதனால்தான், ராவணன்மறைவுக்கு பின் இலங்கை அரசனாகஆனான். எனவே பெரியாரைச் சேர்ந்தால் பயன் எப்போதும் உண்டு. எனவே எப்போதும் தன் அருகில் அறிவுரை கூறுவதற்கு சான்றோர்துணையைபெற்றிருத்தல்வேண்டும்என்றகருத்தைபழமொழிநானூற்றின்257வ துபாடல்வலியுறுத்துகிறது. அரசன் தனக்கு அறிவுரை சொல்லக்கூடிய நல்லவர்களை எப்போதும் தன்னிடத்தில் தன் அருகில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது பெரியாரைத் துணைக்கோடல் என்கிற ஒரு பண்பாகக்கருதப்படுகிறது

**வரி வசூலிக்கும் முறை** :

மன்னராட்சிகாலமோ, மக்களாட்சிகாலமோ மக்களின் நல்லாட்சிக்காகவே அரசுகள் அமைக்கப்படுகின்றன. அரசாட்சியின் இயக்க நிலைக்கு உகந்தது மக்களிடமிருந்து வரி வசூலிக்கும் முறைஆகும். அத்தகைய வரி வசூலிக்கும் முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு, சில பாடல்களைஅரசனுக்கு அறிவுரையாகஅமைக்கிறார்முன்றுரைஅரையனார். அடைவதற்குரிய அரசு பதவியை அடைந்த மன்னன் எக்காலத்திலும் தனக்கு கீழ் வாழும் மக்களை வருத்தாது ஒரு வண்டு எப்படி பூவிலிருந்து வலிக்காமல் தாதுவை உண்கிறதோ அதுபோல வரிவசூலிக்க வேண்டும் என்பதைபழமொழிநானூற்றின் 244

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR 

வதுபாடல்வலியுறுத்துகிறது.மேலும், பழமொழிநானூற்றின் 245 வதுபாடல் மக்களிடமிருந்து வசூலிக்காமல் விடப்பட்ட வரி இன்னும் அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் தண்டனை கிடைக்கும் என்று சற்று அச்சுறுத்தியாவது அந்த வரியை வசூல் செய்துவிட வேண்டும் ஏனென்றால் கரவாது விட்ட பாலின் மேல் பால் ஏறி மிகுதியாக மாடு பால்கரப்பது இல்லை என்பதை அரசன் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறது. இந்தப்பாடல்அரசனுக்குச் சொல்லப்பட்ட ஆகச் சிறந்த அறிவுரையாகப் பார்க்கப்படுகிறது.

“ **அடையஅடைந்தாரைஅல்லவைசெய்து**

**கொடைவேந்தன்கோல்கொடியனாகிக்குடிகள்மேல்**

**கூட்டிறப்பக்கொண்டுதலையளிப்பின்அஃதன்றோ**

**சூட்டுஅறுத்துவாயில்விடல்** ” ( வீ. சிவஞானம், பழமொழிநானூறு, பாஎ. 246, ப.99 )

இப்பாடலில்தன் ஆட்சியில் வாழும் மக்களிடமிருந்துஅநியாயமாகவசூலிக்கப்படும் வரியைக்கொண்டு அவர்களுக்கு மீண்டும் நன்மையை செய்யப்போகிறேன் என்று அரசன்சொல்லுவது சேவலின் கொண்டையை அறுத்து அதைச் சுட்டு அதன் வாயில் உண்ணக்கொடுப்பதற்கு ஒப்பானது என்கிற கண்டிக்கும் தன்மையான அறிவுரையை அரசனுக்கு எடுத்துக்காட்டி உள்ளார் முன்றுரை அரையனார்இவ்வாறுகொடுமைபுரிந்துமக்களைக்காப்பற்றாமல்விட்டுவிட்டவேந்தனின் கீழ்வாழும்உலகம்துன்பத்திற்குரியதுஎன்பதை“**இன்னாகாப்பாற்றாவேந்தன்உலகு** ” ( தண்டபாணிதுரை, இன்னாநாற்பதுமூலமும்உரையும்,ப.16 )என்றுஇன்னாநாற்பதுஎனும்அறநூல்வலியுறுத்துகிறது.

**முடிவுரை** :

அரசன் நீதி வழுவாத செங்கோன்மைக்கு உரியவனாக இருக்க வேண்டும்.சிற்றரசனே ஆயினும் அதிகாரத்தைப்பயன்படுத்தி தன்னளவில் சிறந்தவனாக வாழ வேண்டும். அதாவது,அரசன் அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும். அதிகாரமீறல்கூடாது.அரசன் எவ்வளவு அதிகாரம் உள்ளவனாக இருக்கிறாரோ அந்த அளவிற்கு மக்களிடம் அன்பு செலுத்தக் கூடியவனாகவும் இருக்க வேண்டும்.தலைமையை விரும்புவோரை அரசன் எந்த நிலையிலும் தனக்கு அருகில்வைத்திருக்கக் கூடாது. தன்னைச்சுற்றிஇருப்பவர்களைப்பற்றிஅறியும்மதிநுட்பமும், அறம்பிறழும்போது, அறிவுரைகூறசான்றோர்துணையும்அரசனுக்குஅவசியம். அரசன்,

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2025, IRJTSR

மக்களிடம்வரிவசூலிப்பதில்கருணையோடுகூடியநெறிமுறைகளைப்பயன்படுத்திவரியைவசூலித்துவிடவேண்டும்.

**துணைநூற்பட்டியல்** :


[1] இறையன்பு. வெ, சிம்மாசனசீக்ரெட், நியூசெஞ்சரிபுக்ஹவுஸ்,சென்னை, 2019

[2] சிவஞானம். வீ, பழமொழிநானூறு ( மூலமும்உரையும்), விஜயாபதிப்பகம், கோயம்புத்தூர், 2017

[3] தண்டபாணி. துரை, இன்னாநாற்பது(மூலமும்உரையும்),உமாபதிப்பகம், சென்னை, 2022

[4] மாணிக்கவாசகன். ஞா, சிறுபஞ்சமூலம்(மூலமும்உரையும்), உமாபதிப்பகம், சென்னை, 2021

[5] மாணிக்கவாசகன். ஞா, திரிகடுகம்(மூலமும்உரையும்), உமாபதிப்பகம், சென்னை, 2022

[6] மாணிக்கவாசகன். ஞா, முதுமொழிக்காஞ்சி(மூலமும்உரையும்), உமாபதிப்பகம், சென்னை, 2021

[7] ஹெலினா. தே, திருக்குறள்புதியஉரை, விதைவெளியீடு, ஈரோடு, 2016


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR 